04.10.2021   டி.வி.சி. 201  /2020  PW1 ஜீவிதா

மனுதாரர் தரப்பு சாட்சி 1மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

திருமணத்திற்கு முன்பு எனது குடும்பத்தாருக்கும், எதிர்மனுதாரகுடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டு எனக்கு விருப்பம் இல்லாமல் நான் 1ம் எதிர்மனுதாரைரை திருமணம் செய்து கொண்டேனா என்றால் இல்லை.  நான் 1ம் எதிர்மனுதாரரை சகோதரரான பிரவின்குமார் என்பவரை திருமணம் செய்வதற்கு  சம்மதித்தேன் என்றால் சரிதான். அதற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு 2 நாளுக்கு முன்பு எங்கோ சென்றுவிட்டதாக அவருடைய பெற்றோர்கள் எங்களை அழைத்து பேசினார்கள். 1ம் எதிர்மனுதாரர் வெளியே சென்றவர் திரும்பி வராத காரணத்தால் அவரது சகோதரான பிரவின்குமாரை திருமணம் செய்யும் படி என்னிடம் கேட்டு கொண்டதால் எனது திருமணம் நின்றால் குடும்ப மானம் போய்விடும் என்பதால் பிரவின்குமாரை திருமணம் செய்ய சம்மதித்தேன். ஆனால் திருமணத்திற்கு முந்தைய நாள் 1ம் எதிாமனுதாரர் வந்துவிட்டார். அதனால் நான் அவரை திருமணம் செய்தேன்.  எனக்கு 1ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்ய விருப்பம் இல்லாத காரணத்தால் தான் நான் 1ம் எதிர்மனுதாரைரை நேரடியாக சந்தித்து திருமணத்தை நிறுத்தவேண்டும் என்று கேட்டு கொண்டதால் 1ம் எதிர்மனுதாரர் எனக்காக வீட்டை விட்டு வெளியே சென்று விட்டார் சரியல்ல. எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கு ம்  விவாகரத்து வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டபடுவது 1ம் எதிர்மனுதாரர் த ◌ாக்கல் செய்துள்ள மனுவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். எதிாமனுதாரர் தரப்பு சான்றாவணம்  1 ஆகும். நான் 108 ஆம்புலன்சில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். அது அரசு வேலை இல்லை . நான் ஒப்பந்ததார வேலை யாளாக வேலைசெய்து வருகிறேன். நான் 2017 ஆண்டு முதல்

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

பணிசெய்து வருகிறேன் என்றால் சரிதான். இடையில் உடல் நிலை சரியில்லாமல் அறுவை சிகிச்சை செய்து 4 மாதம் பணியில்லாமல் இருந்தேன். நான் ஆம்புலன்சில் பணியாள்றி வருவதால் விபத்து பதிவேடு பற்றி தெரியும் என்றால் சரிதான். அதில் மருத்துவமனையில் எவ்வாறு பதிவு செய்வார்கள் என்றால் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மருத்துவர்கள் எங்களிடம் கேட்கும்பொழுது நாங்கள் எங்கிருந்து அழைத்து வந்தோம், என்ற நோயாளி பற்றிய விவரத்தை குறிப்பிடுவோம். மற்றபடி மருத்துவர்கள் விபத்து பதிவேட்டில் என்ன எழுதுவார்கள் என்று எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வேலைக்கு செல்லாமல் சும்மா சுற்றி கொண்டிருந்தார் என்றும், அவருக்கு நான் தான் செலவுக்கு பணம் கொடுத்தேன் என்றும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது 2 குழந்தைகள் தனியார் பள்ளியில் படித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது பெற்ோர்கள் என்னை கவனித்து ொள்ளும் அளவுக்கு பண வசதி படைத்தவர்கள் இல்லை என்றால் சரிதான். நான் வேலைக்கு செல்லாத சமயத்தில் என் பெற்றோர் எனக்கு உதவி செய்தார்கள். நான் தற்போது வேலைக்கு செல்வதால் எனக்கு உதவி செய்யவில்லை. நான் வேலைக்கு சென்று என்னையும், என் குழந்தையும் பராமரித்து கொள்ளும் நிலையில் உள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னையும் என் குழந்தையும் பார்த்து கொள்ளும் அளவிற்கு பொருளாதார வசதியுடன் உள்ளேன் என்றால் சரியல்ல. நான் எங்கு பணிக்கு செல்கிறேன் என்றால், கரூரில் உள்ள எந்த பகுதியில் ஆம்புலன்ஸ் உள்ளதோ அந்த நேரத்தில் சென்று கையெழுத்து செய்துவிட்டு வேலை செய்வோம். நான் மண்மங்கலத்தில் உள்ள ஆம்புலன்சில் நான் நீண்ட நாள்களாக ஆரம்ப காலத்தில் பணி செய்தேன் என்றால் சரியல்ல. நான் மண்மங்கல்த்தில் உள்ள ஆம்புலன்சில் வந்த நாள் முதல் பணிசெய்து வருகிறேன். தற்போது சுற்றறிக்கை யின் மூலமாக

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

எந்த பகுதியில் பணி இருக்கிறதோ அங்கு சென்று வேலை செய்வோம். நான் ராஜா என்ற ஓட்டுனரருடன் ஆம்புலச்சில் பணி செய்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கும் ராஜா என்ற நபருக்கும் தற்போது பரச்சனை ஏற்பட்டு அது எனது துறை வரை சென்று உள்ளது என்றால் சரியல்ல. ராஜா என்னைபோல் யார் பணிக்கு வராமல் விடுகிறார்களோ அந்த ஆம்புலன்ஸ் க்கு சென்று வேலை செய்வார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் ராஜா என்ற நபருக்கும் கள்ளதொடர்பு

இருப்பதாக எங்கள் நிர்வாகத்திற்கு தெரியவந்து தற்போது இருவரையும் ஒரே இடத்தில் பணி அமர்ததாமல் இருவரையும் வேறுஇடத்திற்கு யார் விடுப்பு எடுக்கிறார்களோ அந்த பணிக்கு அமர்த்தபடுகிறார்கள் என்றால் சரியல்ல. எனது குழந்தைகளுக்கு 1ம் எதிாமனுதாரர்தான் பள்ளி கட்டணத்தை மீனாட்சி பள்ளியில் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் 1ம எதிர்மனுதாரர் தான் என் குழந்தைகளுக்கு கல்வி கட்டணம் செலுத்தினார் என்றால் சரியல்ல. நான் தற்போது என் பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பானருக்கு கோயம்பள்ளி ஆதிதிராவிடர் பகுதியில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். என து தகப்பானருககு எம.ஜி.ஆர் பஸ்ஸ்டாப் அருகில் வீடு உள்ளது என்றால் சரிதான். தெற்கு செல்லிபாளையம் பள்ளி கூடத்திற்கு அருகில் வீடு உள்ளது என்றால் சரிதன். எனது அப்பாவிற்கு நானும், எனது தம்பி மகேந்திரன் இருவரும் வாரிசுதான் என்றால் சரிதான். திருமணத்தின்போது 1ம் எதிர்மனுதாரர் எனக்கு 7 பவுன் தாலி கொடி போட்டார்கள் என்றால் சரிதான். அது எத்தனை பவுன் என்று எனக்கு தெரியாது. கோயில் செல்லும்போது அதை பரிகாரம் செய்யவேண்டும் என்று என்னிடம் வாங்கிகொண்டார்கள். நான் பொய் சொல்கிறேன் என்றாலும், இன்று வரை அது என்வசம் உள்ளது என்றால் சரியல்ல. எனது பெற்றோர் எனது திருமணத்திற்கு எந்த நகையும் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ளதுபோல் திருமணத்திற்கு பணம் கொடுக்கவில்லை என்று

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

சொன்னாலும், வண்டி வாங்குவதற்கு பணம் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் சமூக நலத்துறையில் புகார் கொடுக்கும்போது அதை யார் தயார் செய்தார்கள் என்றால் நான் சொல்லி சமூக நல அலுவலர் தான் தயார் செய்தார். அதை எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்து செய்யும்போது அடித்தல், திருத்தல் இருந்தது என்றால் சரிதான். அதில் என்ன திருத்தம் செய்யப்பட்டது என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. நான் அதனை திருத்தம் செய்யும்போது, ஜீவனாம்சம் கோரி திருத்தம் செய்து மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் சட்டஆலோசனை பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் என்னிடம் வரதட்சணை கேட்டதாகவோ , என்னை துன்புறுத்தியதாகவோ நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நானும், 1 ம் எதிர்மனுதாரரை பிரிந்து வாழவதற்கு காரணம் எனக்கும், ராஜா என்ற நபருக்கும் உள்ள கள்ளதொடர்பு தான் என்றால் சரியல்ல. அதனை1ம் எதிர்மனுதாரர் கண்டித்ததால்தான் நான் 1ம்எ திர்மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்கிறேன். என்றால்சரியல்ல. எனக்கு நீதிமன்றத்திலிருந்து விவாகரத்து வழக்கில் அறிவவிப்பு வந்த பின்தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தாக்கள்ல செய்துள்ள விவாகரத்து மனுவில் நான் ராஜா என் ற நபருடன் கள்ள தொடர்பு வைத்திருப்பதாக கூறி மனுதாக்கல் செய்துள்ளாா என்றால் சரிதான். அந்த மனுவின் குற்றசாட்டுகளிலிருதப்பித்து கொளவதற்காக பொய்யான சங்கதிகளுடன் கூடிய இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் 1ம் எதிர்மனுதார ர்ா என் குழநதைகளை அடித்து துன்புறுத்தியதாக வழக் ற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுவில் நான் சொல்லியுள்ளதுபோல் என் குழந்தைக்கு அடிபட்டு அதனை எதிர்மனுதாரர்கள் கவனிக்கவில்லை என்று நான் மனுவிற்கக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எனது குழந்தை ரித்திகா கட்டில் இருந்து

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

கீழே விழுந்து விட்டது எனறாலும், அதற்கு ஏற்பட்ட காயத்துக்கு உடனடியாக மருத்துவமனை அழைத்து சென்று எதிாமனுதாரர்கள் தான் சிகிச்சை அளித்தார்கள் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு நான் தனிக்குடித்ததனம் வந்து விட்டேன் என்றால் சரியல்ல. வீட்டிலேயே ஒரு அறை ஒதுக்கி கொடுத்தார்கள். நானும் எனது பெற்றோர்களும் எதிர்மனுதாரர்கள் யாரும் குழந்தையை பார்பதற்கு அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. குழந்கைகள் எதிர்மனுதாரர்களிடம் பேசினால் நான் எதிர்மனுதாராகளை தகாத வார்த்கைளால் பேசி திட்டிவிடுவேன் என்றால் சரியல்ல. என் கணவர் என் குழந்தைகளை பார்த்துக்காத காரணத்தால் தான் என் பெற்றோரிடம் விடு வேலைக்கு சென்றேன். என் கணவரிடமுமெ, அவரது குடும்பத்தாரிடமும், குழந்தைகளுக்கு பாசம் ஏற்படகூடாது என்பதற்காக அவர்களை என் வசம்

வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேலைக்கு செல்வதால் எதிாம்னுதாரர்களிடம் குழந்தைகளை கொடுத்து வளர்ப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. நானும், 1ம் எதிர்ம-னுதாரரும் சேர்ந்து குழநதைகளை வளர்ககவேண்டும் என்று விரும்புகிறேன். நானும் 1ம் எதிாம்னுதாரரும் சேர்ந்து குழந்தைகளை வளர்த்த வேண்டுமென்று சொல்வதுபொய் என்றாலும், எனக்கு ராஜா என்ற நபருடன் கள்ள தொடர்பு உள்ளது என்றாலும், அதனால் தான் நானும் 1ம் எதிர்மனுதாரரும் பிரிந்து சென்றோம் என்றால் சரியல்ல. நானும் என்குடும்பத்தாரும் எதிர்மனுதாிரின் வீட்டிற்கு சென்று 1ம் எதிர்ம னுதாரரின் தயாரான ஜான்சிராணி என்பவரை அடித்து கீழே தள்ளி அவருக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதித்து புகார் கொடுத்தபோது நான் விசாரணைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பிருந்தே எனக்கு 1ம் எதிர்மனுதாரரை பிடிக்கவில்லை என்றாலும், நான் பெயரளவில் திருமணம் ெ சய்துகொண்டு அவரை பல வகையில் மனஉளைச்சல் ஏற்படுத்தியுள்ளேன் என்றால்

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

சரியல்ல. அதனால் தான் 1ம் எதிர்மனுதாரர் மனதளவில் உளைச்சல் ஏற்பட்டு விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 1ம்எதிர்மனுதரர் தாக்கல் செய்துள்ள விவாகரத்து வழக்கிலிருந்து தப்பிபதற்காக தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர்கள் மீது சொல்லியுள்ள வன்கொடுமை குற்றசாட்டுகள் அனைத்து ம் வழக்கிறக்காக பொய்யாக புனையப்பட்டது என்றாலும், அவை அனைத்தும எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகறது என்றால் சரியல்ல. நான் இஷ்டத்திற்கு வாழ வேண்டுமென்பதற்காக 1ம் எதிர்மனுதாரரை மிரட்டவேண்டுமென்பதறக 2 முதல் 5 வரை உள்ள எதிர்மனுதாரர்களின் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுவில் 2 பரிகாரம் தான் கேட்டேன் என்றால் சரிதான். இதர பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கரூர்.